**செய்தி வெளியீடு எண்: 30/2025** **நாள்: 28.03.2025**

**பத்திரிக்கைச் செய்தி**

ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) சென்னையில் ஏற்கனவே நிதியுதவி செய்து வரும் மெட்ரோ இரயில் 2-ஆம் கட்டம் திட்டத்திற்கான காலமுறை ஆய்வு பணிக்காக சென்னை வந்துள்ளது. ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு இரண்டாம் கட்ட திட்டங்களுக்கு நிதியுதவி அளித்து வரும் நிலையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் குழுவுடன் இணைந்து செனையில் இன்று (28.03.2025), தாம்பரம் மற்றும் கிளாம்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் பலமாதிரி ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்நுட்ப அம்சங்களை உள்ளடக்கிய முதற்கட்ட ஆய்வுகளை மேற்கொண்டனர்.

கூடுதலாக, பூந்தமல்லி முதல் பரந்தூர் வரையிலும், கோயம்பேடு முதல் ஆவடி வரையிலும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் குழுவுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் திட்ட இயக்குநர் திரு.தி.அர்ச்சுனன், ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் திட்டக் குழுத் தலைவர் திரு.வென்யு-கு, நிதியியல் மேலாண்மை சிறப்பு நிபுணர் திருமதி. யி கெங், திட்ட ஆலோசகர் திரு. மூஹ்யூன் சோ, சமூக மேம்பாட்டு சிறப்பு நிபுணர் திரு. சிவ ராம கிருஷ்ண சாஸ்திரி ஜோஸ்யுலா, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் தலைமை பொது மேலாளர்கள் திருமதி. ரேகா பிரகாஷ் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு), திரு. எஸ்.அசோக் குமார், (வழித்தடம் மற்றும் உயர்மட்ட கட்டுமானம்), மற்றும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நிதியுதவி செய்வதில் பிற பன்னாட்டு வங்கிகளும் இதே போன்ற ஆர்வத்தை காட்டி வருகின்றன.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**